**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**SC.110/2023**

நாள்.27.01.2026

**M.P.No.04/2025 மனு உத்தரவின் பேரில் அ.சா.8 மீண்டும் அழைத்து 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு சொந்த ஊர் புதுப்பள்ளி, வேட்டைக்காரன் இருப்பு. எனது கணவர் பெயர் தில்லை அரசன். எனது தந்தை பெயர் சங்கரன். நானும், அ.சா.1-ம் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். அ.சா.1-ற்கும், எதிரிகளுக்கும் என்ன சண்டை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 மாதாராமன் சென்னை, உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த மனு உத்தரவின் பேரில் எங்கள் பகுதியில் உள்ள நீர்நிலையில் உள்ள சுமார் 150 வீடுகள் காலி செய்யப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 150 குடும்ப உறுப்பினர்கள் அ.சா.1ன் மீது கோபமாக இருந்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்கும் புதுப்பள்ளி இடத்திற்கும் சுமார் 30கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். சம்பவ நாளில் நான், என் அக்கா வீட்டிற்கு வந்திருந்தேன். என் அக்காவின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடத்திற்கும், என் அக்கா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1/2கி.மீ தூரம் இருக்கும். சம்பவ நாளில் என்ன வேலைக்காக என் அக்கா வீட்டிற்கு வந்தேன் என்றால் வயல் வேலை நடவுக்காக வந்தேன். நான் சம்பவம் நடந்த கிராமத்தை சேர்ந்தவர் அல்ல என்றும், அ.சா.1 என் தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1 எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.